# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**Subject : Tamil** **( 2014 - 2015 )** **Class : VIII**

**மாதிரி வினாத்தாள் - SA - I**

| | பகுதி - 1 [ படித்தல் மற்றும் எழுதுதல் ] | மதிப்பெண்கள் |
|---|---|---|
| அ. | பத்தி வினா - விடை . [ பாடப்பகுதியில் இல்லாதது ] | 5 x 2 = 10 |
| ஆ. | கடிதம் . | 1 x 8 = 8 |
| | பகுதி - 2 [ இலக்கணம் ] | |
| அ. | சான்று தருக . | 3 x 1 = 3 |
| ஆ. | நிரப்புக . | 3 x 1 = 3 |
| இ. | அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க . | 3 x 1 = 3 |
| ஈ. | இலக்கணக்குறிப்பு தருக . | 3 x 1 = 3 |
| உ. | சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக . | 3 x 1 = 3 |
| | பகுதி - 3 [ செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ] | |
| அ. | கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. [ உரைநடை ] | 5 x 1 = 5 |
| ஆ. | கோடிட்ட இடத்தை நிரப்புக [ செய்யுள் + உரைநடை ] | 5 x 1 = 5 |
| இ. | பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. [ செய்யுள் + உரைநடை ] | 5 x 1 = 5 |
| ஈ . | மொழிப்பயிற்சி வினாக்கள் [ செய்யுள் + உரைநடை ] | |
| | பொருள் தருக . | 4 x 1/2 = 2 |
| | பிரித்து எழுதுக. | 4 x 1/2 = 2 |
| | எதிர்ச்சொல் தருக. | 4 x 1/2 = 2 |
| | சேர்த்து எழுதுக. | 4 x 1/2 = 2 |
| உ. | குறுகிய விடை தருக. [ செய்யுள் + உரைநடை ] | 4 x 2 = 8 |
| ஊ. | விரிவான விடை தருக . [ செய்யுள் + உரைநடை ] | 3 x 4 = 12 |
| எ . | அடிபிறழாமல் எழுது. [ செய்யுள்] | 6 |
| ஏ. | துணைப்பாடக் கட்டுரை எழுதுக. | 8 |
| | | மொத்தம் 90 |

## Work sheet - I

அ ) பாம்புகளின் இயல்புபற்றி இருபது வரிகளில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.

ஆ ) களவுபோன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல்துறை ஆய்வாளருக்கு விண்ணப்பம் எழுதுக.

**இ ) குறுகிய விடை தருக.**

1 ) மின்சிட்டு எப்பகுதியில் வாழும் ?

2 ) பருவநிலை மாற்றம் என்றால் என்ன ?

3 ) பறவை, மனிதர்களின் நல்ல நண்பன். எவ்வாறு ?

4 ) அன்பில்லார் வாழ்க்கை தளிர்க்காது எதனைப்போல ?

5 ) அன்புடையார் இயல்பு யாது ?
6 ) உ.வே.சா. ஏன் கொடுமுடிக்குச் சென்றார் ?
7 ) குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள பூக்களின் எண்ணிக்கை எத்தனை ?
8 ) உ.வே.சா.அவர்களைத் தமிழ்தாத்தா என்று வழங்கக் காரணம் என்ன ?
9 ) இராமலிங்க அடிகளார் எழுதிய உரைநடை நூல்கள் யாவை ?

**ஈ ) விரிவான விடை தருக.**

1 ) இராமலிங்க அடிகளார் பற்றிக் குறிப்பு எழுதுக.
2 ) இறைவன் எவற்றிலெல்லாம் கலந்ததாய் இராமலிங்கர் கூறுகிறார் ?
3 ) ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் சில இடங்களை எழுதுக.
4 ) உ.வே.சா. பதிப்பித்த நூல்களின் பெயர்களை எழுதுக.
5 ) அன்பு இலாத வாழ்க்கை எத்தகையது ?
6 ) அன்புடையவரின் சிறப்புகள் யாவை ?
7 ) பறவைகளின் புகலிடமான கூந்தன்குளம் பற்றி எழுதுக.
8 ) பறவைகளை எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ? அவை யாவை ?

**உ ) கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1 ) வெயில் சுட்டெரிக்கும் காலத்தைக் ______________ என்கிறோம்.
2 ) திருக்குறள்________________ எனப் போற்றப்படுகிறது.
3 ) திருக்குறள் ___________________ நூல்களுள் ஒன்று.
4 ) உ.வே.சா. பிறந்த ஊர் _______________.
5 ) இராமலிங்கர் பின்பற்றிய வழிபாடு______________.

**ஊ ) பொருள் தருக.**

| | | | |
|---|---|---|---|
| கருணை | பண் | வன்பாற்கண் | வலசை |
| எய்தினார் | வையகம் | யாக்கை | சரணாலயம் |

எ ) சான்று தருக.

1 ) பெயர் இயற்சொல்
2 ) திரிசொல்
3 ) பெயர்த் திரிசொல்
4 ) திசைச்சொல்
5 ) வடசொல்
6 ) நிறப்பண்புப் பெயர்
7 ) குணப் பண்புப்பெயர்

8 ) அளவுப் பண்புப்பெயர்
9 ) விகுதி பெற்றத் தொழிற்பெயர்
10 ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
11 ) சினையாகு பெயர்
12 ) தொழிலாகு பெயர்
13 ) பண்பாகு பெயர்
14 ) இடவாகுபெயர்

**ஏ ) அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.**

1 ) கிணறு (திசைச்சொல் தருக )
2 ) பல் ( பெயர்த் திரிசொல் தருக )
3 ) செங்காலன்னம் ( எவ்வகைப் பண்புப்பெயர் ? )
4 ) நற்செயல் ( எவ்வகைப் பண்புப்பெயர் ? )
5 ) ஓடுதல் ( எவ்வகைத் தொழிற்பெயர் எனக் கூறுக )
6 ) வறுவல் தின்றான் ( எவ்வகை ஆகு பெயர் ? )
7 ) ஊரே திரண்டு வந்தது ( ஆகு பெயர் நீக்கி எழுதுக )
8 ) நீல நிறமுடைய மலர்களைச் சூடினாள் ( பண்பாகு பெயராக மாற்றுக )

**ஐ ) நிரப்புக.**

1 ) கற்றவர்களுக்கு மட்டுமே விளங்கக் கூடியனவாய் அமைந்த தமிழ்ச்சொல் ________.
2 ) உகிர் - என்பது ____________.
3 ) ஒரு பொருள் செய்யும் தொழிலை உணர்த்தும் பெயர் ______________.
4 ) ஆகு பெயர்______________ வகைப்படும்.
5 ) ஒரு இடத்தின் பெயர் சினைக்கு ஆகி வருவது ______________.
6 ) பண்பாகுபெயர் ______________ எனவும் அழைக்கப்படும்.
7 ) சித்திரை வந்தாள் - என்பது __________________.

**ஒ ) கொடுக்கப்பட்டுள்ள உரைநடையைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

குறிஞ்சிப்பாட்டில் தொண்ணூற்று ஒன்பது பூக்கள் இடம் பெற்றிருந்தன. உ.வே.சாவிடம் இருந்த ஓலைச்சுவடியில் தொண்ணூற்றுஆறு பூக்களின் பெயரே தெளிவாய் இருந்தன. மற்றவை தெளிவாய் இல்லை. மூன்றே மூன்று பூக்கள்தானே தெரியவில்லை என அவர் விட்டு விட வில்லை. அந்த பூக்களின் பெயர் கொண்ட சுவடி யாரிடமாவது இருக்காதா என்று ஊர் ஊராக, வீடு வீடாகத் தேடிச் சென்றார். குறிஞ்சிப்பாட்டு - பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் கபிலர் ஆவார். பல மாதங்கள் கழித்து அவர் தேடிய பூக்களின் பெயர்கள் உள்ள சுவடி ஒன்று கிடைத்தது. அதன் பிறகே அந்நூலை அச்சுக்குக் கொடுத்தார், எதையும் அரை குறையாகச் செய்ய விரும்பாத தமிழ்த்தாத்தா உ.வே.சா.

வினாக்கள்

1. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றிருந்த பூக்கள் ____________.

அ) ஐம்பது ஆ) எண்ணூறு இ) பதினைந்து ஈ) தொண்ணூறு

2. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று _________.

அ) சிலப்பதிகாரம் ஆ) நாலடியார் இ) ஆத்திச்சூடி ஈ) குறிஞ்சிப்பாட்டு

3. குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் _____________.

அ) கபிலர் ஆ) சமண முனிவர்கள் இ) இளங்கோ ஈ) ஒட்டக்கூத்தர்

4. தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்பட்டவர் __________.

அ) ஈ.வெ.ரா ஆ) உ.வே.சா இ) வை.கோ ஈ) காந்தி

5. அரை குறையாக - என்ற சொல்லிற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு.

அ) சீரும் சிறப்பும் ஆ) கண்ணும் கருத்தும்

இ) பேரும் புகழும் ஈ) படித்தும் படிக்காமலும்

**ஓ ) அடிபிறழாமல் எழுதுக.**

1. துணை - என முடியும் திருக்குறள்.
2. பிறர்க்கு - என முடியும் திருக்குறள்.
3. சிறப்பு - என முடியும் திருக்குறள்.
4. அன்பிலார் - எனத் தொடங்கும் திருக்குறள்.
5. புறத்துறுப்பு - எனத் தொடங்கும் திருக்குறள்.
6. அன்பகத்து - எனத் தொடங்கும் திருக்குறள்.
7. உடம்பு - என முடியும் திருக்குறள்.
8. அறம் - என முடியும் திருக்குறள்.
9. கண்ணில் - எனத் தொடங்கும் வாழ்த்து.